Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 173/2024 PW-10**

Name : குருபரன்
Father / Husband name : வெங்கடாச்சலம்
Village : விழுப்புரம்
Age : 36
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 06.02.2026

Accused 1 to 3 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது விழுப்புரம் குற்றப்புலனாய்வு சிறப்பு பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 04.01.2024 ம் தேதி இரவு 20.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ஆனந்தநாதன் என்பவர் பதிவு செய்து உதவி ஆய்வாளர் திரு.சசிகுமார் முதல் விசாரணை செய்து குற்ற எண் 7/2024 u/s 294(b),323,324,506(2) IPC என்ற வழக்கினை எனது பார்வைக்கு வைத்தார். பின்னர் வழக்கின் சாட்சிகளை விசாரித்தேன். உதவி ஆய்வாளர் சசிகுமார் 22.02.2024 அன்று அ.சா.2 செல்வக்குமாருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கீர்த்தனா அவர்களை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார். ( **அ.சா.2 ன் விபத்து பதிவேட்டுடன் காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ) பின்னர் காயச்சான்றிதழின் அடிப்படையில் அ.சா.2 க்கு ஏற்பட்டக்காயம் கொடுங்காயம் என்று சான்றிதழ் வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவான u/s 294(b),323,326,506(2) IPC ன்படி பிரிவு மாற்றம் செய்தார். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சசிகுமார் பணிமாறுதலின் காரணமாக சென்றதால் அதனை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 10.05.2024 ம் தேதி மேற்படி வழக்கில் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரருக்கு இலவசமாக முதல் தகவல் அறிக்கையின் நகல் வழங்கவேண்டும்

என்றால் சரிதான். புகாரில் காயம்பட்டது இடது கண்ணிலா அல்லது வலது கண்ணிலா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் காலை 9 மணி எனவும், பார்வை மகசரில் காலை 08.30 மணி என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். மேல்சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 31.01.2023 இரவு சுமார் 9 மணியளவில் காயம்பட்ட அ.சா.2 ஸ்ப்பீக்கரை தள்ளிவைக்கும்போது அவராகவே கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. உண்மையை மறைத்து அ.சா.1 பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் கொடுக்கப்பட்ட புகார் அல்ல என்றால் சரியல்ல. சம்பவயிடம் செல்லாமல், சாட்சிகளை விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து, எதிரிகள் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.